முருகப்பெருமான் துணை

**மகான் தருமராஜன் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.12.2023**, வெள்ளிக்கிழமை

1. மன்னவனே தரும பலமிக்க
   மாதவராஜனே அரங்கனே
   அன்னதான உன்சேவை மெச்சி
   அகிலமதில் ஆழ்வார்களை தொடர்ந்து
2. தொடர்ந்துமே பஞ்சபாண்டவர்களும்
   தேசிகனுக்கு அறிவுரை ஆசியுரைப்போம்
   தடையற சோபகிருது தேள்திங்கள்
   தக்கபடி மூவைதிகதி புகர் வாரம்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 15 ம் நாள், 01.12.2023, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் தருமராஜனும் உரைப்பேன்
   வையகம் தருமபலம் பெற
   அறமாக ஞானம் அருளுகின்ற
   அரங்கமகான் வழி சிறந்த வழியாகும்
4. ஆகவே உலகோர் ஏற்றுமே
   அவரவர் கருமவினை அகல
   வகைபட எளிய தருமமாக
   வல்லமையோடு அன்னதான சேவை
5. சேவை துவக்கி வருகவே
   செப்பிட வாராந்திர மாதாந்திர
   அவனியில் நித்ய அன்னதானமாக
   அரங்கன் காட்டும் வண்ணம்
6. வண்ணமுடன் செய்து வர
   வருங்காலம் தருமபலம் கூடி
   எண்ணுகின்ற காரியம் எல்லாம்
   இலகுவாய் சித்தியாகக் கூடும்

7. கூடவே தன்பலம் பெருகுவதுடன்
குருவருளால் உலகமெங்கிலும்
இடரகற்றும் வல்லமையாக மாறி
எங்கும் எதிலும் தருமம்தயவு பெருகிட

8. பெருகிட உலகையே சுத்தி செய்யும்
பேராற்றலாக மாறி இனிதே
முருகப் பெருமானை வணங்க
முழுமை ஞானமும் கிட்டி

9. கிட்டியே கலியுக மக்களுக்கு
கேட்காமலே சகலகாரிய சித்தி
தட்டாது அரங்கனால் வரமாகி
தரும சக்கரமாய் பாதுகாப்புப் பெருகி

10. பெருகியே ஞானிகள் ஆக
பேருலகை மாற்றும் மகா
தரும சக்திகளாக உருவாகி
தரணியிலே நல்லாட்சி தருவர்

11. தருவர் ஞானிகள் ஆட்சி
தருமமும் தழைக்க இனிதே
தருவர் ஞான ஆட்சிதனை
தருமராஜன் உரைத்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–